914

The Trained Teacher

A HIGH-CLASS TAMIL MONTHLY FOR TEACHERS

VOL. 16 JUNE 1921 No. 6

30 AUG 1921

CONTENTS

1. AVVAYAR ... ... *Editor* 121
2. TODAS IN NILGIRIS ... ,, 126
3. OUR DUTY TO INFERIOR ANIMALS ... *Janavinodhini* 129
4. PALLU ON TIRUNARAIYUR *K. S. Gopalachariar* 135
5. BETEL WITH INGREDIENTS ... *Dhanvanthri* 141

EDITOR—C. R. NAMASIVAYA MUDALIAR.

Madras:
C. COOMARASAWMY NAIDU & SONS



நல்லாசிரியன்

(1921ஹ௵ ஆகஸ்டு௴ 25உ வெளியானது)

பொருளடக்கம்

			பக்கம்
1.	அவ்வையார்	பத்திராதிபர்	121
2.	நீலகிரி தொதவர்கள்	,,	126
3.	அடிமைப்பட்ட ஜந்துக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள்	ஜனவிநோதினி	129
4.	திருநறையூர்ப் பள்ளுக்கும்மி	K. S. கோபாலாசாரியார்	135
5.	தாம்பூலம்	தன்வந்தரி	141

பத்திராதிபர் - கா. நமச்சிவாய முதலியார்

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

வெளியிடுவோர்

வருடச் சந்தா ஒன்றரை ரூபா] [தனிப் பிரதி 3 அணா

நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை

வயது 16 | 1921௵ ஜூன்௴ | மாதம் 6

AVVAYAR

அவ்வையார்

அவ்வையார் மற்றும் சில நூல்களும் இயற்றியுள்ளார் என்று கூறுகின்றனர். அந்நூல்கள் இப்போது கிடைப்பனவாகக் காணவில்லை. அரிய புலவர்களைப் பார்த்து அவர்கள் இயற்றியனவாக அவர்தம் தலைமேல் அநேக புஸ்தகங்களைச் சுமத்துவது நம்மவர் இயல்பு. அதற்குத் திருஷ்டாந்தம் ஆத்திசூடி முதலிய நூல்களே போதும்.

அவ்வையார் அவ்வப்போது தனிப்பாடல்கள் இயற்றியதாகப் பல செய்யுட்கள் வழங்குகின்றன. அவற்றை ஆராய்ந்தால், பெரும்பாலன அவ்வையார் பாட்டென்று தோன்ற வில்லை. அநேகமாய் அப் பாடல்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அற்புதக் கதையை ஒட்டி வருகின்றது. கதைகள் நிலைத்தால் கவி-

யும் நிலைக்கும்; ஆராய்ச்சியில் கதையே காற்றில் பறப்பதானால் அதை ஒட்டிய கவியின்கதி யாதாகும்! இதை விளக்க ஒரு கதையைக் காட்டுவோம்:

ஒருநாள் அவ்வையார் கோவலூர்க்கடுத்த காட்டின் வழியே போய்க்கொண்டிருக்கையில் காற்றும் மழையும் கடிதுவர, அவ்வையார் அங்கே எங்கும் தங்குமிடமின்றி மழையில் நனைந்து, குளிரால் உடல் நடுங்கி நடப்பாராயினர். நடக்கையில் பெண்ணை நதியின் தென்கரையில் குடிசை ஒன்று தோன்றுதலும் அவ்வையார் அதற்குள் நுழைந்தனர். அங்கிருந்த பாரி என்னும் இடையன் மகளிர், அங்கவை சங்கவை என்பார் இருவர், அவ்வையாரைக் கண்டு, இரக்கங்கொண்டு, விரைந்துவந்து, ஈரம் புலர்த்தி உடுத்திருந்த ஆடையைக் களைந்து, தம் நீலச்சிற்றுடையை அணிவித்து, அனல் மூட்டிக் குளிர் காய்வித்து, நெய்யில் துவட்டிய முருங்கைக் கீரையையும் கேழ்வரகுக் களியும் ஊட்டி உண்பித்தனர். அவ்வையார் அப்பெண் மணிகளின் அருங்குணத்தை மெச்சிச் சிறப்பித்துச் சில கவிகள் பாடினர். பின்பு அவர்களைத் தெய்வீகன் என்னும் ஒரு சிற்றரசனுக்கு மணஞ்செய்விக்க மனங்கொண்டு, தக்க ஏற்பாடுகள் செய்து, அவர்கட்குத் திருமணம் சிறப்புற முடித்தனர் என்ப. அத் திருமணத்திற்குத் தமிழ் நாட்டு மூவேந்தரும் அவ்வையார் விரும்பியபடி விஜயஞ் செய்தனராம். இதை ஒட்டிய கவிகள் பலவழங்கி வருகின்றன. அவை வருமாறு:

அப் பெண்மணிகள் தம் நீலச்சிற்றுடையைத் தமக்குத் தந்ததைச் சிறப்பித்து,

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரியன் றீந்த களைக்கொட்டும் — சேரமான்
வாரா யெனஅழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச் சிற் றுடைக்கு நேர்.

எனவும்,

அவர்கள் இட்ட இன்னமுதைச் சிறப்பித்து,

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டு — பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை யிட்டார்
கடகஞ் செறிந்தகை யால்.

எனவும் பாடினராம்.

அவர்கட்குக் கலியாணஞ் செய்விக்க எண்ணி, திருமணப் பத்திரிகை எழுத விநாயகக் கடவுளை வரும்படி,

ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய் — பரிவுடனே
கண்ணோலை வோலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீர்ப்பன் சபித்து.

எனப் பாடினராம்.

பின்பு தமிழ் நாட்டு மூவேந்தரையும் அக் கலியாணத்திற்கு வரும்படி,

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக உட்காந்தே — பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனமிசைந்தான்
சங்கவையை யுங்கூடத் தான்.

எனச் சேரனுக்கும்,

புகார்மன்னன் பொன்னிப் புனலுடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து — நகாதே
கடுக வருக கடிக்கோவ லூருக்கு
விடியல் பதினெட்டா நாள்.

எனச் சோழனுக்கும்,

வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே — தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியஈ ரொன்பானாள்
ஈண்டு வருக இயைந்து.

எனப் பாண்டியனுக்கும் பாடி விடுத்தனராம்.

அவ்வையார் விரும்பியவாறே அங்கு வந்த அரசர் மூவரும் கலியாணத்தைக் கண்டு களித்தபின் தமக்கு நுங்கு வேண்டும் என்று வேண்டினராம். அது நுங்கு கிடைக்குங் காலம் அன்று; ஆயினும் அவ்வையார் அங்கே வெட்டுண்டு விழுந்து கிடந்த பனங்-துண்டத்தைப் பார்த்து,

திட்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து

நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

என்று பாட, அத்துண்டம் துளிர்த்தெழுந்து காய்த்து, நுங்குகள் தந்தது என்பர்.

கலியாணத்தில் இடைப் பெண்களுக்குச் சீதனமாக ஆடுகள் தருவது வழக்கமாம். அதை யுணர்ந்த அவ்வையார் சேரனை நோக்கி, 'இவர்கட்கு ஆடுகள் சீதனமாகத் தருக' எனலும், அவன் பொன் ஆடு ஒன்றைக் கொடுக்க, அவ்வையார் அதனைப் புகழ்ந்து,

சிரப்பான் மணிமுடிச் சேரமான் தன்னை
சுரப்பாடு கேட்கவே பொன்னாடொன் றீந்தான்
இரப்பவர் என்பெறினும் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்.

எனப் பாடினராம்.

இந்தக் கலியாணத்திற்குப் பாலும் நெய்யும் வேண்டி, அங்கே செல்லும் பெண்ணை யாற்றைப் பார்த்து,

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திவரு நெய்பால் தலைப்பெய்து — குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா.

என்று பாட, அப் பெண்ணையாறு பாலும் நெய்யுமாகப் பெருக்கெடுத்து வந்ததாம்.

பிறகுஅவ்வூரில் பொன்மாரிபெய்யும்படி வருணனைப்பார்த்து,

கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவல் — பெருமணத்து
நன்மாரி தான்கொண்ட நன்னீ ரதுதவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி.

எனப் பாடுதலும் தாமதமின்றிப் பொன்மாரி பெய்ததெனவும் அதுகண்ட அவ்வையார் கோவலூரை வியந்து,

பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி ஆடையாம்
அந்நாள் வயலரிசி ஆகுமூர் — எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனின்
ஓங்கு திருக்கோவ லூர்.

என்று பாடி முடித்தனராம்.

இனி இதன் உண்மையை ஆராய்வோம். இந்தக் கதையை ஒட்டிவரும் பாட்டுக்களில் 'பாரிபறித்த பறியும்' என்னும் பாட்டும் 'வெய்தாய் நறுவியதாய்' என்னும் பாட்டும், வேறு சந்தர்ப்பங்களில் பாடியதாகவும் வழங்குகின்றன.

திருமண வோலை எழுதுவதற்கு விநாயகக் கடவுளே வரவேண்டு மென்பது பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. அன்றியும், அவ்வையார் தம் உபாசனு தெய்வமாகிய விநாயகக் கடவுளை 'வாராயேல் தன்னுண்மை தீர்ப்பன் சபித்து' என்று கூறி இருப்பரென்பது நம்பத் தக்கதன்று. இப்பாட்டில் காணும் 'கண்ணுலம்' என்னும் சொல் இக்காலத்தே தெருப்பாட்டுப் பாடும் கவிராயர் பாட்டினும் காணுதல் அரிதாம். மற்றும் இப்பாட்டுக்களில் காணும் அசந்தர்ப்பமான சொற்களும் விஷயங்களும் பல. பெண்ணையாறு நெய்பால் கலந்து வருவது எப்படி? நெய்யும் பாலும் கலந்துவரின் அஃது எவர்க்கு எவ்வாறு பயன்படும்? இவ்வாறெல்லாம் கோத்து வைத்தது எதற்கென்று சிலர்க்கு ஐயம் உண்டாகலாம். அரிய கவிஞர்கள், பெரியோர்கள் முதலியவர்களைப் பற்றிச் சிறப்பித்துச் சொல்ல வேண்டுமென்னும் நோக்கம் பலர்க்குமுண்டு. அப்படிப்பட்டவர் ஒருவரைப்பற்றிச் சிறப்பித்துச் சொல்லுங்கால் முதலில் உண்மை நிலைக்கு ஒரு சிறிது மாறியுங் கூறத் தலைப்படுவர். அது, நாள்படப் பல்லோர் வாயில்பட்டுப் பலபடப் பெருகும். பின்னர், அக்கதை ஒரு புலவன் கையிற்படுமாயின் அவன் அக்கதைக்கு இடையே சில செய்யுட்களைச் செய்து நுழைத்து விடுவான். அதன் பின்னர் அதன் உண்மை நிலையைக் கண்டறிவது எவர்க்கும் எளிதன்று. இதனால் புலவர், பெரியோர், முதலானவர்களைப்பற்றி வழங்கும் கதைகளெல்லாம், வழங்கும் செய்யுட்களெல்லாம் இப்படிப்பட்டவைகளே என்று யாம் துணிந்து கூறவரவில்லை. உண்மைக் கதைகளும் உண்டு; பொய்க்கதைகளும் உண்டு. பொய்க்கதைகளையும் நிலைநிறுத்தப் புகுவதால் உண்மைக் கதைகளுக்கும் ஒருவித ஊறுபாடு உண்டாய் விடுகின்றது. இதை வற்புறுத்தவே யாம் இவ்வளவும் விரித்து உரைக்க வந்தோம்.

குறிப்பு — ஸ்ரீமான் அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் அவ்வையார் சரிதத்தை அதிக நுட்பமாக ஆராய்ந்து ஓர் அரிய நூல் எழுதியிருக்கின்றனர். அவ்வையாரைப் பற்றி முற்றும் அறிந்துகொள்ள விரும்புவோர் அதனைப் பெற்றுப் படித்துத் தெரிந்துகொள்வாராக.

பத்திராதிபர்.

TODAS IN NILGIRIS

நீலகிரித் தோதவர்கள்

(முன்தொடர்ச்சி பக்கம் - 104)

மேலே கூறிய திருஷ்டாந்தக் கதையினால் தோதவர்கள் எருமை முதலிய கால் நடைகளைத் தமக்குச் சிறந்த செல்வமாக எண்ணுகின்றனர் என்பது நன்கு விளங்குகின்றது. தோதவர் எருமைகளை மேய்த்துக்கொண்டு எளிய வாழ்க்கையை அநுசரித்து வாழும் இயல்பினையுடையவர்கள். அவர்கள், தங்கள் இருப்பிடத்திற் கருகில் பள்ளத்தாக்கான இடத்தில் கருங்கற்களினால் சுற்றிலும் சுவர்கள் எழுப்பிப் பெரியதோர் மாட்டுக்கிடையை அமைக்கின்றனர். அதற்குள், ஒருபுறம் கன்றுகளை மடக்கிவைப்பதற்குச் சிறியதோர் கிடையும் ஏற்படுத்துகின்றனர். அவர்கள் தம் எருமைகளை இராத்திரி காலங்களில் அதில் மடக்கிவைத்துப் பொழுது விடிந்ததும் அவற்றின் பாலைக் கறந்துகொண்ட பிறகு வெளியில் ஓட்டிக்கொண்டு போய் மேய்த்து வருவார்கள்.

தோதவர் ஒருவிதமான தெய்வபக்தி உள்ளவர்கள். அவர்கள். தாம் வசிக்கும் குடிசைகளுக்குச் சுமார் 200, 00 அடிகளுக்கு அப்பால் கூரையினால் கோயிலொன் றமைக்கின்றனர். அதைச் சுற்றிச் சுமார் நாலைந்தடி உயரமுள்ள சுவர் எழுப்பிச் சுத்தமாக வைத்திருக்கின்றனர். அக்கோயில் படத்திற் காட்டியபடி கோபுரம்போல் அமைந்திருக்கும். சில கோயில்கள் அவர்கள் வசிக்கும் குடிசையைப் போலவே இருப்பதுண்டு. அந்தக் குடிசைக்குள் மற்றொரு சிறு குடிசை அமைத்து அதற்குள் ஒரு சிறு உருவத்தை அமைத்து வைக்கிறார்கள். அவ்வுருவம் மிகச் சிறியதாயும், முழுதும் பொன்னால் இயன்றதாயும் இருக்கின்றது. அது தலைமுறை தலைமுறையாகத் தம்முன்னோர்களால் வைத்தும் பூஜிக்கப்பட்டு வருவதென்று அவர்கள் கூறுகின்றனர். அதைப் பூசிக்க பூசாரி ஒருவன் உண்டு.

பூசாரி அந்தக் கோவிலுக்குள் பூஜை செய்யச் சென்றால், அவன் தன்முறை ஆகிறவரையில் மற்றவர்கள் வசிக்கும் வீட்டிற்குள் வருவதில்லை. ஒருவனுடைய முறை நாலைந்து மாதங்கள்

வரையில் நீடித்திருக்கும். அவனுக்கு மற்றவர்கள் உணவுப் பொருள்களைக் கோவிலண்டைக் கொண்டுபோய்க் கொடுப்பார்கள். அவன் அதை வாங்கிக் கோவிலின் பெரிய குடிசைக்குள் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு அங்கேயே உறங்குவான். பூசாரி என்பவன் வேறொரு வகுப்பினன் அல்லன். தோதவர்களுக்குள்ளேயே ஒவ்வொருவனை முறை ஏற்படுத்திக் கொண்டு அக்கோயிலில் இருந்து பூசை செய்வது வழக்கம். ஒரு மந்தில் இருப்பவர்கள்



தோதவர் கோயில்

எந்தக் காரணத்தினாலாவது பூசாரியாக இருக்க இயலாவிட்டால் அப்போது அவர்கள் வேறொரு மந்தில் இருப்பவன் ஒருவனை நியமித்து அழைத்துக் கொண்டுவந்து, தமது கோயிலில் பூசாரியாக அமைப்பர். அவன் மேற்கூறியவாறு உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு, சமைத்து உண்டு, கோயில் காரியங்களை நடத்திக்கொண்டு வருவான்.

பூசாரி அக்கோயிலில் செய்யும் காரியம் யாதென்றறிய நீங்கள் அவாவுவீர்கள். தோதவர் அதிகாலையில் பால்கறந்து அதை அப்படியே கோயிலுக்கு எடுத்துக்கொண்டு போய் மதிற்சுவருக்கு வெளியே இருந்துகொண்டு பூசாரி கையிற் கொடுப்பர். அவன் அவரவர் கொண்டுவரும் பாலைத் தனித்-

தனியே கோயிலுக்குள் கொண்டுபோய் அந்தப் பொன்னுருவின் முன்வைத்து, படைத்து விட்டுக் கொண்டுவந்து கொடுத்து விடுவான். அதன் பிறகுதான் தொதவர் அப்பாலே விற்பனை முதலிய காரியங்களுக்கு உபயோகப்படுத்துவர். இதுவுமன்றி, விவாகம் குழந்தை பிறத்தல் முதலிய காலங்களில் நடத்த வேண்டிய சில கிரியைகளையும் இப்பூசாரி நடத்துவான். அவற்றைப் பின்னால் விவரிப்போம்.

ஸ்திரீகள் எந்தக்காரணத்தினாலும் கோவிலுக் கருகில் போகக் கூடாது என்னும் நிபந்தனை தொதவர்களுக்குள் உண்டு. ஆறு, ஏழு வயதுக்கு மேற்பட்ட பெண்கள்கூட அந்த ஆலயத்திற் கருகில் அடி எடுத்து வைத்தல் கூடாதாம். சுமார் நாற்பதைம்பதடிகளுக்கு அப்புறம் ஒரு குத்துக்கல் நடப்பட்டிருக்கும். பெண்கள் ஆலயத்தின் வழியாய்ச் செல்லும்போது அந்தக் குத்துக் கல்லைக் கடந்து ஆலயத்துக்கருகில் போவதே இல்லை. அன்னிய ஜாதியார் ஆண் பெண் எவரும் அந்த ஆலயத்தண்டை மதிற்சுவர் வரையில் போகலாம். அதைக் கடந்து உள்ளே செல்ல அவர் ஒருவரையும் அவர்கள் விடுவதில்லை. அப்படிச் செல்லும் அன்னியன் ஒருவன் அங்கிருந்துகொண்டு பணம் முதலிய பொருள்களைக் கொடுப்பதாகச் சொல்லி அழைத்தாலும் தொதவமாதர் குத்துக்கல்லின் எல்லையைக் கடந்து கோயிலின் அருகிற் செல்ல ஒருகாலும் உடன்படார். சிறு பெண்கள்கூட இந்த ஏற்பாட்டைக் கடந்து நடப்பதாகத் தெரியவில்லை. ஸ்திரீகள் அக் கோயிலில் சில காலங்களில் நடக்கும் திருவிழாக்களில் மேற்கூறிய எல்லைக்கல்லின் அப்புறத்திலிருந்துகொண்டு பூசாரி வெளியில் கொண்டுவரும் உருவத்தைக் கண்டு வணங்குகின்றனர்.

பத்திராதிபர்.

OUR DUTY TO INFERIOR ANIMALS

அடிமைப்பட்ட ஜந்துக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள்

மனித ஜாதியிலும் மனிதர்கூட்டத்திலும் சேராதவைகளாயினும், மனிதரோடுகூடவே வசிக்கின்ற பிராணிகள் அநேகம் உண்டு. அவை நமக்கு அவசியம் தேவையான பல பொருள்களையும் சவுக்கியத்தையும் விசேஷமாய் அளிக்கின்றன. அந்தப் பிராணிகள் இல்லாவிட்டால் நாம் பிழைத்திருப்பதே கூடாதுதான். ஆதலால் அவைகளிடத்தில் நாம் மிகவும் கடன்பட்டவர்களாகி, நன்றியுடன் அவைகளை ஆதரிக்கத்தக்கவர்களாகிறோம். அவைகளைப்போல நமக்கு அவ்வளவு உபகரிக்கத்தக்கவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா? ஒருவருமில்லை.

அவைகளுள் மிகுந்த ஊக்கத்தோடு நம்முடைய பெரும் சுமைகளை எங்கும் இழுத்துக்கொண்டு ஓடுகிற பிராணி யொன்று எப்போதும் நமக்கு நேசனாயிருக்கிறது. அது மிகுந்த தேகவலிமையும் சுறுசுறுப்பும் உடையதாகி, வாயில் கடிவாளமும் முதுகின்மேல் சேணமும் போடவும், தன்னை வண்டி முதலியவைகளில் பூட்டவும் பொறுமையாய் உடன்பட்டிருந்து, நமக்கு இஷ்டமான இடமெல்லாம் நம்மையும் நம்முடைய சாமான்களையும் இழுத்துக்கொண்டு ஓடுகின்றது. இதுவல்லாமல் தன் முதுகின்மேல் நம்மையும் சுமந்துகொண்டு நெடுந்தூரம் யாத்திரைபோகின்றது. அந்தப் பிராணியினுடைய உதவியில்லாவிட்டால் நாம் நம்முடைய மெலிந்த கால்களைக் கொண்டு ஒருபோதும் அவ்வளவு தூரம் நடந்து போகமாட்டோம்.

அது இயற்கையில் எவர்க்கும் அடங்காததாகி தன்மனம் போனபடி காட்டுவெளிகளில் திரிவதிலேயே நோக்கங்கொண்டதாயினும், பிடித்துப் பழக்கினால் அடங்கி ஆட்பட்டிருக்கவும், வருந்தி உழைக்கவும் கற்றுக்கொள்கின்றது. அது மனிதர்களுக்கு எக்காலத்திலும் உபயோகமானது. அதனுடைய உதவியில்லாவிட்டால் மனிதர் ஒருபோதும் நாகரிகம்பெற வல்லவர்களாகார்.

கள். இவ்வாறு நமக்கு மிகவும் சகாயமாயிருப்பது நம்முடைய குதிரையல்லவா? கோவேறுகழுதை எருது முதலியவைகளும் ஏறக்குறைய இப்படிப்பட்டவைதாம்.

இக்குதிரைகள் செய்கின்ற வண்டியிழுப்பது ஏருழுவது முதலான வேலைகளை மனிதர்கள் ஆணும் பெண்ணுமாய்த் தாமே செய்யத் தொடங்குவார்களானால், அவர்கள் ஒருபோதும் நாகரிகம் பெறமாட்டார்கள்; அவ்வேலையும் அதிகமாக நிறைவேறாது. நெடுந்தூரத்தி லிருக்கின்ற தேசர்களுக்கும் நமக்கும் போக்கு வரவு நின்றுபோய்விடும்; உண்டி உடை கட்டடம் கட்டுதல் முதலியவைகளுக்கு உபயோகமான சாமான்கள் விசேஷமாய் உள்நாடுகளுக்கு வெகு தூரம் அனுப்புவது அசாத்தியமாகிவிடும். அதனால் மனிதர்களுக்குத் தேவையான பொருள்களுள் மிகவும் சொற்பமே கிடைக்கும்படி யாகும். அவர்களுக்குள்ள விசேஷமான சாமர்த்தியங்களும் வெளிவருவதற்கு வழியில்லாமற் போய்விடும்.

இக்காலத்தில் சாமான்களை ஏற்றிக்கொண்டுபோவது முதலான பல வேலைகளைச் செய்யக் குதிரைகளுக்குப் பதில் இருப்புப்பாதை வண்டிகளும் நீராவி யந்திரங்களும் ஏற்பட்டிருக்கின்றனவே, இனிக் குதிரைகளைப்பற்றி யாவதென்ன என்பீர்களோ? அப்படியில்லை. இருப்புப்பாதை வண்டிக ளிருந்தாலும் குதிரை, மாடு முதலானவைகளின் உதவியில்லாவிடின், அவ் விருப்புப் பாதை வண்டிகளும் பயன்படாதவையாகும். இருப்புப் பாதை வண்டி நமது வீட்டுவாயிலில் வந்து நிற்கமாட்டாதே! குதிரை வண்டிகள் இல்லாவிட்டால் சாமான்களைத் தூக்கிக்கொண்டு அவ் வண்டியிருக்குமிடம் தேடி நாம் கால்நோவ நடந்தல்லவோ ஓடவேண்டும்; அப்படியானாலும் நமக்கு இஷ்டமான இடமெல்லாம் போக இருப்புப்பாதை வண்டி வருமா? மேலும் மனிதர்கள் சாஸ்திர விஷயங்களில் விசேஷ பயிற்சியுடையவர்க ளானாலன்றி நீராவி யந்திரங்களை நிர்மிக்க வல்லவராக மாட்டார்கள். அந்த சாஸ்திரப்பயிற்சியோ, மனிதர்களுடைய வலிமை புத்தி சாதுரியம் முதலானவெல்லாம் குதிரைகள் செய்யவேண்டிய வண்டியிழுப்பது முதலிய கடினமான முரட்டு வேலைகளுக்கே உபயோகப்பட்டுப் போவதாயிருந்தால், அப்போது அவர்களுக்கு ஒரு-

போதும் உண்டாகமாட்டாது. ஆகையால் குதிரைகள் இல்லாவிடின் இருப்புப் பாதை வண்டிகள் உற்பத்தியாவதற்கே வழியில்லாமற்போயிருக்கும்.

வியாபாரங்கள் விசேஷமாக நடந்தேறுகின்ற ஒரு நகரத்து வீதியில் பத்து-நிமிஷகாலம் நின்று பார்ப்போமானால், அவ்வளவு காலத்திற்குள் அவ்வழியாய் எத்தனை குதிரைகள் வண்டிகளை இழுத்துக்கொண்டும் மனிதர்களை ஏற்றிக்கொண்டும் போகின்றன என்பதை நாம் எளிதில் அறியலாம் பின்பு அதைக்கொண்டு குதிரைகளும் மாடுகளும் நமக்கு இவ்வளவு உபயோகமானவையென்றும், அவை நமக்கு அடங்கி ஊழியம் செய்ய உடன்படாமற்போனால், அப்போது போக்கு வரவுகளுக்கும், பல வியாபாரங்களுக்கும், பலவிதமான விநோதங்களுக்கும் உடனே அழிவு உண்டாகுமென்றும் நாம் ஊகித் தறிந்துகொள்ளலாம்.

மூட்டை சுமக்கின்ற மற்ற மிருகங்களும் இவ்வண்ணமானவையே. குதிரைகளைப்போலத் தேக வலிவுள்ளவையான கழுதைகளும் பொறுமையோடும் பிரியத்தோடும் தம் வலிமையை நமக்கு உபயோகப்படுத்துகின்றன. அவைகளைக் கொள்ளவும் காப்பாற்றவும் செலவு குதிரைகளைப் பார்க்கிலும் சொற்பமாயிருப்பதால் அவை எளிய ஜனங்களுக்கு முக்கியமாய் உபயோகப் படுகின்றன. அது செய்கின்ற உதவிக்கு அதனிடத்தில் நன்றியுடையவர்களாய் அதை ஆதரிக்க வேண்டியதுபோக அநேகர் அதை அடித்து உதைக்கிறார்கள். மேலும் தக்க இரைபோடாமல் வெயிலிலும் மழையிலும் அல்லாடவிட்டு வருத்துகிறார்கள். இதே ஜாதியைச் சேர்ந்த கோவேறு கழுதைகள் முக்கியமாக மலைநாடுகளில் தனிகர் தரித்திரர் எல்லாருக்கும் விசேஷமாய் உபயோகமாகின்றன.

இவ் வண்ணமே மாடுகள் நமக்கு மிகவும் முக்கியமானவை. இங்கிலாந்து முதலான சிலவிடங்களில் ஏருழுவது முதலிய வேலைகளுக்குக் குதிரையையே இப்போது உபயோகப்படுத்துகிறார்களாயினும், நமது தேசத்திலும் ஆபிரிக்கா முதலான பல தேசங்களிலும் எருத்து மாடுகளையே கட்டைவண்டி யிழுப்பது ஏருழுவது முதலான வேலைகளுக்கு உபயோகப்படுத்துகின்றனர்.

ஆபிரிகா அரேபியா இத்தேசங்களில் வழிதுறையில்லாத வனாந்தரங்களின் மூலமாய்ப் பெரும்பாரங்களைத் தூக்கிக்கொண்டுபோக ஒட்டகங்களும் யானைகளும் உபயோகப்படுகின்றன.

இந்தப் பிராணிகளிடத்தில் நாம் மிகவும் கடன்பட்டவர்களாகிறோம். அந்தக் கடனைத் தீர்த்துக்கொள்ள நம்மாலாவதில்லை. ஏனெனில் நாம் ஒருவர்க்கொருவர் பணங்கொடுத்துக் கடன் தீர்த்துக்கொள்வதுபோல இவைகளுடைய கடனைத் தீர்ப்பதற்கில்லை. பணத்தைக்கொண்டு அவை என்ன செய்யமாட்டும்? நாமோ அதை ஆஸ்தியாகச் சேர்த்துவைத்துத் தள்ளாதவயதில் அதைக்கொண்டு ஜீவிப்போம். நாம் அனுபவிப்பதுபோன்ற நல்லுணவுகளையும் சவுக்கியங்களையும் அவைகட்கு அளித்தும் அக்கடனைத் தீர்த்துக்கொள்வதற்கில்லை. ஏனெனில், நமக்கு எது நல்லுணவாயும் சவுக்கியமாயும் தோற்றுகிறதோ, அது அவைகட்கு நல்லதாகத் தோன்றமாட்டாது. பின்னென்னவெனின், அவைகளுடைய சவுக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும் தேவையானவை இவை யென்பதை நாம் தேர்ந்தறிந்து அதற்கேற்றவைகளைக் கொடுத்தே அக்கடனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாம் நமக்கேற்ற நல்லுணவைத் தேடுவதுபோல அவைகளும் தமக்கேற்றவைகளையே தேடுகின்றன. இராவில் தங்கத் தகுதியான மறைவிடம் அவைகட்கு வேண்டும்; பகற்பொழுதில் வேலைசெய்து அலுத்துப்போன பிறகு அதனால் ஒழிந்துபோன தேகவலிமை மறுபடி உண்டாகும் பொருட்டுச் சிறிதுநேரம் இளைப்பாறி யிருத்தலும் வேண்டும்.

மேலும் அவைகளின்மேல் ஏற்றுகிற சுமை சுலபமாய்த் தாங்கத்தக்கவளவுக்கு ஒருபோதும் அதிகப்பட்டு இருக்கக்கூடாது. அவைகளின்மேல் போடுகிற சேணம் முதலியவை அவைகளைச் சிறிதும் வருத்தாதவைகளா யிருக்கவேண்டும். சாட்டையால் அவைகளை அதிகமாய் அடித்துத் தொந்தரை செய்யலாகாது. வேண்டுமானால் அவைகட்குச் சுறுசுறுப்பு உண்டாகும்படி ஒவ்வொரு தருணத்தில் மெதுவாகச் சாட்டையை உபயோகிக்கலாம். நாம் நம்முடைய பிள்ளைகளைப் பழக்குவதுபோலவே பிரீதியோடும் பொறுமையோடும் இந்தப் பிராணிகளையும் பழக்கவேண்டும். அவை கிரமமாய்ச் செய்யவேண்டிய

வேலை இன்னதென்று அவைகட்கு நாம் தெரியக் கற்பித்துக் கொடுத்துவிடுவோமானால், பிறகு நாம் அதற்காக அவைகள் விஷயத்தில் சாட்டையை உபயோகிக்கவேண்டிய அவசியமே நேரிடாது.

குதிரைகள் கழுதைகள் முதலானவை நம்மிடத்தில் மிகவும் விசுவாசமுள்ளவைகளாய் நம்மோடுகூடவே வசித்திருக்கத்தக்க பிராணிகளாம். நாம் தட்டித் தடவிக்கொடுத்து இன்சொல் சொல்லக் கேட்பதில் அவை மிகுந்த சந்தோஷமுள்ளவை. இப்பொழுது சாதாரணமாய்ப் பலர் செய்துவருவதுபோல நாம் அவற்றைப் பலவகையாய்த் திட்டிக் கொடுமை செய்யாமல் அன்போடு ஆதரித்துவருவோமானால், அப்பொழுது அவை மிகவும் மதிக்கப்பட்டவையாகி நமக்கு அடிமையாய் நாம் காலாலிட்ட வேலையைத் தலையாற் செய்து பலவிதங்களில் நமக்கு உபயோகமாகும். இப்பொழுது அங்கங்கே நடத்தப்பட்டு வருகின்ற ஸர்க்கஸ் என்னும் அதிவிநோதமான ஆட்டத்தை அநேகர் கண்டு களித்திருப்பார்களல்லவா? அதில் குதிரை வையாளி எவ்வளவு விநோதமாயிருக்கின்றது! அங்கே குதிரைகள் யஜமானனுக்கு எவ்வளவு வசப்பட்டிருக்கின்றன பாருங்கள். இவ்வண்ணம் உதவுகின்றவைகளிடத்தில் கொடுமையாக நடப்பவன் எவ்வளவு மதிகெட்டவனாயிருக்கவேண்டும்.

வயிற்றுக்குத் தகுந்த இரையில்லாமல் பசியால் வருந்துவதோடுகூடத் தன் முதுகு தாங்கமாட்டாத சுமை ஏற்றப்பட்டிருந்தாலும் அப்போதும் மனம் சோராமல் அதை வருந்தி யிழுத்துக் கொண்டு போகும் மாடு முதலிய மிருகங்களைச் சிறிதும் தயைதாக்ஷிணிய மின்றி ஒருவன் அடித்து உதைப்பானானால் அது பார்க்க எவ்வளவு பரிதாபமானது! இவ்வண்ணமே பசியினாலும் சுமை யிழுப்பதனாலாகிய வருத்தத்தினாலும் தலையை ஆட்டிக் கொண்டு கடிவாளத்தின் வலியால் வாயில் நுரை தள்ளுகின்ற குதிரைகளை வண்டியிழுக்கவிட்டு அவ் வண்டியில் சவுக்கியமாய்ச் சீமானும் சீமாட்டியும் ஏறிக்கொண்டு போவதைப் பார்ப்பதும் மிகப் பரிதாபமானது. தமக்கு உதவுகின்ற பிராணிகளை இப்படிச் சிறிதும் இரக்கமின்றி வருத்துகிறவர்கள் நன்றிகெட்ட கொடுங்கோலர்களே யன்றி வேறல்லர்.

ஆயின் அந்தப் பிராணிகள் நமக்குச் செய்கின்ற உதவிக்கு ஏற்றதாய்ப் பத்திலொருபங்குகூடப் பிரதியுபகாரம் நம்மால் செய்யமுடியாது. ஆனாலும் அவைகளிடத்தில் அன்பும் ஆதரவும் இரக்கமுமுடையவர்களாயிருந்தால் அது சிறிதளவாவது ஆறுதலாயிருக்கும்.

பசுமாடுகளும் ஆடுகளும் நமக்கு வேண்டிய பால் தருகின்றன. ஆடுகள் கம்பளம் செய்வதற்குரிய உரோமங் கொடுக்கின்றன. அவைகளை ஆதரியாமல் வருத்துவதும் அநியாயமே. இவ்வண்ணமே நாய் பூனை முதலிய மிருகங்களை வருத்துவதும் கூடாது. அவை எப்போதும் நம்மோடுகூடவே கூடிக் களித்து விளையாடிக்கொண்டிருக்க, யார்தான் அவற்றை வருத்த விரும்புவார்கள்? நாம் என்னபேச்சுப் பேசினாலும் அதை நாய் அறிந்துகொண்டு அதன்படி நடக்கும். எவ்விதத்திலாவது நமது உபயோகமான காரியத்தைச் செய்வதிலேயே அதற்கு உற்சாகம் அதிகம். நாம் அதைச் சீராட்டினால் அது வாலையாட்டிக்கொண்டு நம்மெதிரில் வந்து கொஞ்சும். நாம் எங்கே போனாலும் நம்மைப் பின் தொடர்ந்து ஓடிவரும். நமக்கு விரோதியாய் ஒரு மனிதனாவது மிருகமாவது கெடுதிசெய்ய வருவதாகத் தோன்றினால், அவர்களைப் பார்த்துக் குரைத்துத் துரத்திவிடும். ஆய்ந்து பார்க்குமளவில் நாய் மிகவும் நன்றியுள்ள மிருகம். அது தன்னை வளர்ப்பவனை எப்படிப்பட்ட ஆபத்திலும் கைவிடாது.

இவைகளும் இவைபோன்ற இதரமான மிருகங்களும் பழகினாலும் பழகாவிட்டாலும், நாம் அவற்றினிடத்தில் அன்பாயிருப்போமாயின், அவைகளும் நம்மிடத்தில் அன்பாயிருக்கும். இந்த மிருகங்கள்மாத்திரமே யல்ல; நாம் துஷ்டத்தனத்தால் தீங்குசெய்யாமல் நன்மை செய்வோமானால், பறவைகளும் அணில் ஓணான் எலி முதலிய ஜந்துக்களும் நம்மிடத்தில் நன்றியுள்ளவைகளாயிருக்கும். முக்கியமாய் இந்தப் பிராணிகளுக்குப் பொல்லாங்கு செய்பவர் பெரியோர்களைப் பார்க்கிலும் சிறுவர்களே யாவர். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வது கொடுமை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தினாலல்ல; யுக்தாயுக்த விவேகம் இல்லாமையாலும் விளையாட்டுத் தனத்தாலுமேயாம். இப்படி நேரும் கொடுமைகளைத் தெரிந்தவர்களான பெரியோர்கள் 'பொல்லாங்-

கென்பவை யெல்லாந்தவிர்' என்னும் ஔவைச் சொல்லை அவர்களுடைய புத்தியிற் புகட்டித் தம்மா லியன்றவளவு கொடுமை செய்யவொட்டாமல் தடுத்து அப்பிள்ளைகளுக்கு ஜீவகாருணியம் இயற்கையிலேயே அமையும்படி பயிற்றக்கடவர். ஜீவஹிம்சை செய்யாதிருப்பதைப் பார்க்கிலும் பெருத்த தருமம் வேறொன்று இல்லையென முன்னோர்கள் முறையிட்டிருக்கின்றனர்.

'உற்ற நோய்நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.'

ஜனவிநோதினி

PALLU ON TIRUNARAIYUR

திருநறையூர்ப் பள்ளுக்கும்மி

(முன்தொடர்ச்சி பக்கம்-120)

நூல்

1. கண்டவிட மெங்குங் காவேரிபாயக்
 களிக்கும் நறையூர் நகரமாம்
அண்டர்பதிகளை யெட்டி முத்தநதரும்
 அணிகொள் கோபுரச் சிகரமாம்
கொண்டல்தவழ் மதிள் சோலையும்
 குலைகொள் வாழையின் சாலையும்
மண்டபலாமாவும் மல்லிகை முல்லையும்
 வளருஞ் செண்பகப் பொழில்களும். (தன)

2. கொல்லைவள ரிளங்க முகினம்
 குளஞ்சி யெனுமிச்சை மிருகனம்
நல்ல கடாரை நாரத்தையு
 நளின வோடைச் சேர்த்தியும்
எல்லையெங்குஞ் செந்நெற் கரும்புகள்
 இகலி வளர்வயற் சுரும்புகள்
நல்ல விசைபாடும் நாகரிகமுள்ள
 நங்கை வஞ்சுளத்தாய் நாட்டிலே. (தன)

3. குன்று வாடைக்காற்று தாக்குமாம்
குயில்கள் கூவுதல் வாய்க்குமாம்
நின்று மயிலினம் ஆடுமாம்
நிரம்ப வண்டுகள் பாடுமாம்
துன்றுமினி தட்டான் பறக்குமாம்
தூறிமின்னி மழை கறுக்குமாம்
என்றும் மணிமுத்தா நதிதனில்வெள்ளம்
ஏறிப்பாயும் பாரும் பள்ளியரே. (தன)

4. தேசமெங்குஞ் செந்தூள் பறக்கச்
செழித்துத் திருக்காவேரிவெள்ளம்
வீசியலைக ளடித்துச் சுழித்து
விளங்கித் தொனித்து நீடுபள்ளம்
வாசமிகுஞ் சோலை மாட்டிலும்
வயல்கள் காட்டாறு காட்டிலும்
ஆசுடனேவரும் வெள்ளத்தின் மீன்கள்பேர்
அறையக் கேளுமின் பள்ளியரே. (தன)

5. கொடுவாள் விராலி கெண்டையுளுவை
கொறத்தி கெளுத்தி வாளையும்
முடுகுமகரஞ் சினைப்பன்றி வெளவால்
முள்ளுள ஞாராவுங் காளையும்
திடுக்குத் திடுக்கென்னு மசரையும்
சேலுடனே யேறு மசரையும்
நெடிய பாம்பாமை கடம்பனும்நெடு
ஞிமிறுங் கொத்துமீன் நிசமுமே. (தன)

6. குறளை யிருளை நறுளையும்
குட்டியுஞ் சட்டிமீன் கூந்தலும்
மறையன் சக்கரம் பணிலமும்
மடலை திமிலை துமிலமும்
நிறமிகுஞ் செய்மீன் நிமிங்கிலம்
நீண்டவால் சிங்கந் திமிங்கிலம்
திறலுடன் பெருவெள்ளத்திலே யிவை
திளைத்து நீஞ்சுமே பள்ளியரே. (தன)

7. சீனிவாஸ க்ஷேத்திரம்
செகத்தைக் காக்கும் காத்திரம்
மேன்மை சொன்னால் தோத்திரமிந்த
மேதினிக் கெல்லாம் நேத்திரம்
வானவர் தினம் பணிவராம்
வந்தடைந்தார் தாபந் தணிவராம்
மான்விழிவஞ்சனே சீனிவாஸன் கிராம
வழிவகை கேளும் பள்ளியரே (தன)

8. சிறுகுடி சேர்த்திக் கட்டளையும்
திருப்பணிக் கட்டளை தன்னுடனே
நறைவெள்ளம் பாயுங் கட்டளையும்
நன்றான நாய்ச்சியார் கட்டளையும்
அறவிளை வட கட்டளையும்
அணிமுக் காவெளிக் கட்டளையும்
குறையாது முப்போக மெப்போதும் பொலியும்
கோட்டை கோட்டையாப் பள்ளியரே (தன)

9. தண்ணந்தோட்டம் வாழைப் பத்தியுடன்
தப்பாமலே யந்தக் கட்டளைகள்
நன்னயமாய்ப் பயிரிட்டுக் கெட்டி
நாற்புறமுங் கரைவெட்டிக் கொட்டி
தண்ணீர் பாயும்படி யொப்பமிட்டுச்
சட்டமா அண்டைகள் வெட்டியிட்டு
உண்ணல மாங்குடிப் பள்ளர்கள்பேரை
உரைத்திடு வேன்கேளும் பள்ளியரே (தன)

10. மன்னன்பொன்னன் சின்னான் குட்டையனும்
மாரிகாரி ராமன் மொட்டையனும்
சின்னப்பயல் சுப்பன் சொக்கலிங்கன்
தீரன்வீரன் சாமி பொக்கைவெங்கன்
சின்னையன் வேலனும் வெள்ளையனும்
சேப்பன் மூக்கன் ராக்கன் குள்ளையனும்
கன்னிப்பயல்காளி கந்தன்பெற்றான் கொப்பை
காணிக் குடிகளாம் பள்ளியரே (தன)

11. பெத்திப்பயல் நல்லான் பிரமனும்
பிச்சான் கணபதி தருமனும்
உத்தண்டி யாண்டி நிமலனும்
ஊமையன் செவிடன் கமலனும்
இத்தனை யாயிரம் பள்ளர்நல்லார்
எல்லைகொண்ட தழும் பண்ணையெல்லாம்
நித்தியம் பொன்னேரைக் கட்டுந்தருணத்து
நேர்சகுனங் கேளும் பள்ளியரே (தன)

12. தெக்கிணக் கெவுளி சொல்லுமாம்
சிறக்க ஆந்தைசொல் நல்லதாம்
தெக்கிண கரந்தான் துடிக்குமாம்
சீர்பூர்ண கும்பம்பெண் எடுக்குமாம்
பச்சைப் பாற்குட மெதிர்நேருமாம்
பார்ப்பா ரிரட்டை போருமாம்
அச்சமில் லாக்காக மடியில்வலமாக
ஆனை பரிகளுங் கனைக்குமாம் (தன)

13. உச்சியில் கருடன் தொனிக்குமாம்
ஊர்முன் காடையிடஞ் செனிக்குமாம்
மெய்ச்சும் போத்துநாரை வலம்போமாம்
மின்வலி யனிடம் நல்மாமாம்
இச்சகு னங்களின் பலத்திலே
ஏறநெல் விளையும் நிலத்திலே
கச்சைகட்டி நுகம் பூட்டியுழுகின்ற
காளைகள் பேர்கேளீர் பள்ளியரே (தன)

14. முன்னேர் பொன்கொம்பு வெள்ளையும்
முடக்குவால் புள்ளி குள்ளையும்
பின்னேர் மயிலை கவிடனும்
பீலி மிரட்டியன் தவிடனும்
மன்னுநெட்டைக் கொம்பன் வெறியனும்
வால்கூழை மோழை முறியனும்
எக்காளுஞ்சண்டி குட்டையு மொட்டையும்
ஏழைக் கவிட்டுக் காளையும் (தன)

15. பண்டிப்பெருங் குண்டை வண்டனும்
பச்சைக் கறுப்பனும் மிண்டனும்
கண்ட பேர்களுழும் நந்தியும்
காலைமாலை யுழுந் தொந்தியும்
தண்டை சதங்கைகள் குலுங்கவே
சந்ததம் வயலி லிலங்கவே
பண்டைய நாள்முதல் நட்டுவருகின்ற
பள்ளத்தி பேரைச் சொல்லுகிறேன் (தன)

16. சுந்தரி யந்தரி மாரியும்
சோகைச்சி காமாச்சி வீரியும்
சந்தி சிவகாமி வெட்டிச்சியும்
சாந்தி யலர்மேலி கட்டைச்சியும்
குந்தி வள்ளிநாடி மாகாளியும்
குப்பிசுப்பி நீலிவாய் மூளியும்
பொந்தையும் பொன்னியுஞ் சின்னியுங் கன்னியும்
பொட்டா ளுடன்பொட்டை முத்தியுமே (தன)

17. சந்துவீட்டுக் குள்ளி நல்லியும்
சாமளருஞ் செல்வி பல்லியும்
விந்தைவார்த்தை சொல்லும் வேலியும்
வெட்டிவார்த்தை சொல்லும் நீலியும்
பந்தியாய்ப் பள்ளத்தி கள்பலபேர்
பரப ரப்புடன் காலைமுதல்
அந்திமட்டும் நட்டுக் கூலிவாங்கித் தாய்கள்
ஆனந்தங் கொள்ளுவர் பள்ளியரே (தன)

18. வேலிக் காயிரக் கலநெல்லாம்
விளைந்த றுப்பார்கள் நிலமெல்லாம்
காலையு மாலையுங் கணக்கில் லாமலே
களஞ்சியங் கொட்டாரம் நிறைப்பராம்
பாலனம் பண்ணுநற் பஞ்சாயத்தார்
பத்திநலமுள்ள நெஞ்சை யொத்தார்
ஞாலம் புகழ்சினி வாஸனுக்கும்
நாயகி வஞ்சுள வல்லியர்க்கும் (தன)

19. சம்பா பெருஞ்சம்பா சிறுசம்பா
சாலிச்சம்பா மூத்து நறைச்சம்பா
இன்பார் மூழுச்சம்பா சடைச்சம்பா
இனியகா சிச்சம்பா மடுச்சம்பா
செம்பாளை தில்லை நாயகனும்
சிறுமணி பொட்டடை ஆனைக்கொம்பன்
தம்பாட்டி லேதாமே விளையும் வஞ்சுளத்
தாயார் கடாக்ஷத்தால் பள்ளியரே (தன)

20. கோயிலிற் கட்டடக் கொட்டா ரமது
கோடி கலங்கொள்ளும் வித்தாரம்
பேசித் தலைக்கட்டி முட்டாது முற்றும்
பெருமை சொல்லவிங் கெட்டாது
வாசற் படிக்கட்டோ ராயிரமாம்
வாரிவாரிக் கொட்டக் கோபுரமாம்
மூசிமொத்துப் போட்டுப் பூசிச்சாந்தையிட்டு
முற்றுங்கா வல்வைப்பர் பள்ளியரே (தன)

21. ஆறு காலமு மாராதனம்
அழகா நடத்துவர் பேரோதனம்
மாறென் றில்லாத திருப்ப ணிகளை
வருஷந் தோறும் நடப்பிப்பார்
தேறித் திருவுள்ளஞ் சீனிவாஸன்
தேவிவஞ் சுளையுந் தாமும்நேசம்
ஏறத்திருவரு ளிவ்வுல கோர்களுக்
கென்றுஞ் செய்வரிங்குப் பள்ளியரே (தன)

ஆக்கியோன் பெயரும் பயனும்

அம்புவி யோர்புகழ் காரப்பங்கான்
ஆத்ரேய கோபால வாரியன்சொல்
நம்பி சீனிவாஸன் நாய்ச்சியார்தம்
நற்றமிழ்ப் பள்ளுக் கும்மிதனை
அன்புடன் பாடுவார் கேட்டிருப்பார்
அகில பாக்யமுந் தாமடைந்தே
இன்பமுறுஞ் செல்வ மைந்தர்க ளுடன்
என்றென்றைக் கும்வாழ்வர் பள்ளியரே (தன)

வாழி

வாழி சீனிவாஸன் வஞ்சுளையும்
வாழி நறையூரிம் மாநகரும்
வாழி யாழ்வார்க ளாரியர்கள்
வைணவருந் தமிழ் மாமறையும்
வாழியாத் ரேயகோபா லாரியன்
வையகந் தன்னிலே வண்மையுடன்
வாழி கோயிற்பரி சனங்களும்
வாழி வாழி வாழியே. (தன)

K. S. GOPALACHARIAR.

BETEL WITH INGREDIENTS

தாம்பூலம்

தாம்பூலம் அல்லது வெற்றிலை பாக்குப் போடும் வழக்கம் நமது ஜனங்களுக்கு அதிகமாகையால் இதைத் தெரியாதவர்களில்லை. தாம்பூலம் போடுவதின் குணத்தை நமது பெரியோர்கள் மிகவும் விஸ்தரித்து எழுதியிருக்கின்றார்கள். இதன் குணகுணங்களைச் செவ்வையாய்த் தெரிந்து கொண்டால் அதனால் உண்டாகும் லாப நஷ்டங்களைத் தெரிந்துகொள்ளலாம். ஆகையினால் அதைக்குறித்த சில அபூர்வமான விஷயங்கள் தெரிவிப்போம்.

தாம்பூலம் என்றால் என்ன? — தாம்பூலம் என்றால் பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு இந்த மூன்றையும் முறைப்படி சேர்த்து மெல்லுவது என்று ஏற்படும். இன்னமும் இது, வேறு வஸ்துக்களின் சேர்க்கையினாலும், பச்சைக் கர்ப்பூரம் முதலிய வாசனை வஸ்துக்கள் சேர்க்கையினாலும் விசேஷப்படுகிறது.

பாக்கு வெற்றிலையின் அளவு:— ஒரு பாக்கு ஐந்து வெற்றிலை (அர்த்தநிஷ்க சூர்ணம்) நல்ல சுண்ணாம்பு, அதற்குப்பாதி பச்சைக்கர்ப்பூரம், மூன்று தக்கோலம், நான்கு லவங்கம், ஒரு ஜாதிக்கா-

யில் வீசம் பாகம் இவைகளெல்லாம் சேர்ந்து இருப்பது சாஸ்திரீய தாம்பூலம் எனப்படும்.

தாம்பூலத்தின் குணங்கள் — தாம்பூலம் போடுவதனால் வாய்க்கு உருசியும், பசியும் உண்டாகும். வாய்க்குள்ளிருக்கும் புழுக்களைச் சாகடித்து ஈர்களிலிருக்கும் நோய்களைப் போக்கும். வாய்க்கு நல்ல வாசனையை உண்டாக்கி பற்களைக் கெட்டிப்படுத்தும். போஜன குதூஹல கிரந்தத்தில் தாம்பூலமானது, கடுரஸ (காரம்) முக்கியமாய் திக்த மதுர லவண கஷாயமான ரஸங்களுடன் கூடி, வாதக்னமாய் கிரிமிகளைப் போக்கடித்து, ஜாடராக்னியை அதிகப்படுத்தும் என்று சொல்லி யிருக்கிறது.

தாம்பூலத்தின் விசேஷ குணங்கள் — தாம்பூலத்திற்கு அநேக காலமாய் (நாகவல்லி) வெற்றிலையே உபயோகப்படுகிறதே தவிர, மாயிலைக்கொழுந்து முந்திரிக் கொழுந்து (கலுவரேகுலு) முதலியவைகள் உபயோகப் படுகிறதில்லை. இது தேகத்திற்கு மேனிகொடுத்து பற்களை உறுதிப்படுத்தி, ஸ்லேஷ்மங்களைப் போக்கடிக்கிறது. சங்குச் சுண்ணாம்பை உபயோகப்படுத்தினல் ரக்தசூலை, குல்மங்களைப் போக்கடிக்கிறது. பிரவாலாதி சுண்ணங்களை உபயோகப்படுத்தினல் காச ரோகம் போகும்.

பச்சைக் கர்ப்பூரம், தக்கோலம், காசிக்கட்டி, கஸ்தூரி இவைகளோடு கூடிய தாம்பூலம் முற்சொன்ன குணங்களோடு கூடி, உடம்பிலிருக்கும் நரம்புகளுக்கும், மூளைக்கும் சக்தியை அதிகப்படுத்தி முகரோகங்களைச் சேர்க்க வொட்டாது. காசிக்கட்டி தாம்பூலத்திற்கு அதிக முக்கியமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாம்பூலம் போடும் காலங்கள் — தாம்பூலம் போடுவது, விடியற்காலையில் சிலரும், போஜனமானதே சிலரும், காலையினும் மாலை இராத்திரி காலங்களில் நல்லதென்று சிலரும் நினைக்கிறார்கள். இந்த மூன்று காலங்களில், விடியற்காலையில் போடும் தாம்பூலத்தில் பாக்கு அதிகமாகவும், மத்தியானத்தில் போடும் தாம்பூலத்தில் சுண்ணம் அதிகமாயும், இராத்திரியில் போடும் தாம்பூலத்தில் வெற்றிலை அதிகமாகவும் சேர்ப்பது நல்லது.

தாம்பூல ரஸத்தை விழுங்கும் கிரமம் — தாம்பூலத்தை வாயில் போட்டுக்கொண்டு மெல்லும்போது, முதலில் உண்டாகும் ரஸம்

விஷசம்பந்தமாக இருக்கும். ஆகையினால், அதைத் துப்பிவிட வேண்டியது. இரண்டாவது உண்டாகும் ரஸம் அஜீர்ண குணத்தோடு கூடி உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது. ஆகையினால் இதையும் துப்பிவிடவேண்டியது. மூன்றாவது தடவை உண்டாகும் ரஸந்தான் அமுதத்திற்குச் சரியான ருசியாக இருக்கும். அதுதான் உடம்பிற்கு நல்லது. ஆகையினால் அதை விழுங்கலாம். படிப்பில் ஆசக்தியுள்ளவர்கள் இராத்திரியில் தாம்பூலம் போடுவது தப்பாகாது.

தோஷங்கள் : — சுண்ணத்தில் தோஷங்கள் இருப்பது சகஜம். பாக்கை வாயில் போடும்போது பார்த்துப் போடவேண்டும். ஏனென்றால் அதில் புழுக்கள் ஏதாவது இருக்கும்; அது உடம்பிற்குக் கெடுதி பண்ணும். ஆகையினால் கெட்டபாக்கை உபயோகப்படுத்தக் கூடாது. வெற்றிலையும் சுண்ணம்பும் இல்லாமல் வெறும்பாக்கை மெல்லுவது பாண்டு ரோகத்தை யுண்டாக்கும். முதலில் வெற்றிலையில் கொஞ்சம் கிள்ளி வாயில் போட்டு மென்றுவிட்ட பிறகே பாக்கைப் போடவேண்டும்.

'வெற்றிலைக்கு முன்னே வெறும்பிளவை வாயிலிட
நற்றிருவா மங்கை நடப்பளே — வெற்றிலையை
முன்னிட்டுப் பின்பிளவை மெல்லுவரே யாமாயின்
மன்னனைப்போ லாவார் மகிழ்ந்து.'

வெற்றிலையின் நரம்புகளை யெல்லாம் கிழித்து எடுத்து விட்டு, வெற்றிலையின் நுனியையும் கிள்ளி எறிந்து விட்டு வாயில் போடவேண்டும்; சுண்ணம்பு வைத்திருந்த வெற்றிலையைப் போடக்கூடாது.

வெற்றிலை — தாம்பூலத்திற்குப் போடும் இலைகள் மிகவும், துளிராகவும், சுத்தமாகவும் இருக்க வேண்டும்.

பாக்கு — நல்ல தேசத்தில் விளைந்ததாயும், நல்ல பக்குவத்தியுள்ளதாயும், கடினமானதாயும், சதை பிடித்தவைகளாயும் இருக்கவேண்டும்.

சுண்ணம்பு — சுண்ணம்பு நீராய், பச்சைக் கர்ப்பூர தைல ஒழுக்கே போலவும், மஞ்சள், ஆகிய இந்த பதார்த்தங்களோடு கலந்து சுத்திசெய்ததாயும் முத்து, பவளம், சங்கு பஸ்பங்கள் சேர்ந்ததாயும் இருந்தால் நல்லது.

தாம்பூலம் திரிதோஷ ஹரம் — சுண்ணும்பு உஷ்ண வீர்யத்தை உண்டாக்குவதால் வாதத்தையும், இலைகள் கபத்தையும், பாக்கு பித்தத்தையும் கண்டிக்கும். தாம்பூலம், பற்களிலுள்ள புழுக்களைக் கண்டிக்கும். சுண்ணும்பை ஜாஸ்தியாக உபயோகப்படுத்தினுல் ஷண்டத்வ ரோகம் உண்டாகும்.

தாம்பூலம் அதிகமாக உபயோகப் படுத்துவதால் உண்டாகும் கெடுதிகள் — பாண்டுரோகம், பற்களுக்கு பலஹீனம், பலக்குறைவு, அக்ஷிரோகம் முதலியன இது பித்தத்தையும் ஜாஸ்தியுண்டாக்குவதால் உஷ்ணமும் அதிகமாகும்.

தாம்பூலம் போடக்கூடாதவர்கள் — பித்த அகோரத்தினுலும், இரத்தபித்தத்தினுலும் வாதைப்படுகிறவர்களும், ஜ்வரத்தோடிருப்பவர்களும், கண்ணே யுள்ளவர்களும், பல ஹீனர்களும், க்ஷயரோகிகளும் தாம்பூலம் உபயோகப்படுத்தக்கூடாது.

தாம்பூலத்திற்கு விரோதமான வஸ்துக்கள் — பால், விளாம்பழம், பலாப்பழம், அத்திப்பழம், வாழைப்பழம், கிருதம், தேன், தேங்காய் இவைகள் தாம்பூலத்திற்கு விரோதம். ஆகையினுல் இவைகளைச் சாப்பிட்டவுடனே தாம்பூலம் போட்டுக்கொள்ளக்கூடாது. இவைகள் மிகவும் தாம்பூலத்திற்கு விரோதிக்கக்கூடியவைகள். சிலர் தாம்பூலம் போட்டுக்கொண்டதே, மயக்கத்தினுல் மரித்தார்களென்று கேள்விப்படுகிருேம். அது இப்பேர்ப்பட்ட தாம்பூலத்திற்கு விரோதவஸ்துக்கள் சேர்ந்ததனுல் உண்டான கெடுதியோ என்னவோ, எவருக்குத் தெரியும். ஆகையினுல், நமக்குக் கெடுதி என்று தெரிந்தவைகளை யுபயோகிக்கக் கூடாது. மேலும் சாப்பிட்டவுடனும் தூக்கத்திலிருந்து எழுந்த உடனேயும் ஸ்நானம் செய்தவுடனேயும், வாந்தியெடுத்தவுடனும் தாம்பூலம் போடக்கூடாது.

தாம்பூலத்தினுல் உண்டான மயக்கத்திற்கு சிகிச்சை — புளியை வாயில் போட்டுக்கொண்டு ரஸத்தை விழுங்கினுல் மயக்கம் குறையும். குளிர்ந்த ஜலத்தை சாப்பிடுவதும் நல்லது. கட்டியாக இருக்கிற நெய்யைக் கொஞ்சம் வாயிலிட்டு அதன் ரஸத்தை விழுங்கினுல் பாக்கினுலுண்டான எவ்வித மாரடைப்பும் நிவர்த்தியாகும்.

தன்வந்தரி

READY FOR SALE! **JUST OUT!**

The First Book in the Field

Vernacular Atlas Geography Series - Book I

MADRAS PRESIDENCY

படங்களை ஒட்டின பூகோள சாஸ்திரம்

முதற் புத்தகம்

சென்னை ராஜதானி

BY

K. DORAISAWMI IYENGAR

WITH AN INTRODUCTION

By H. A. HART, M.A., L.T.

PRICE ANNAS 8.

The Heroines Of Ind

இந்து ஸ்திரீ ரத்னங்கள்

இதில் சித்திரப் படங்களுடன் 10-இந்திய ஸ்திரீகளின் சரித்திரங்க ளடங்கியுள்ளன.

PART I

BY

C. S. RAMASAWMY AYYAR.

Price As. 8.

Apply to— ***C. Coomarasawmy Naidu & Sons,***

35, Chinnatambi Street, Madras.

QUEEN MARY READERS

மேரி ராணி வாசக புஸ்தகங்கள்

இப்பெயர்கொண்ட புஸ்தகங்கள் ஒன்றுமுதல் ஐந்துவரை வெளிவந்துள்ளன. இவை ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் பெண்களுக்காகவே ஏற்ற முறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. நம் இந்திய குடும்பத்துக்கு அவசியமாகத் தெரியவேண்டிய அரிய விஷயங்கள் எளிதாகத் தெரியும்படி கூறப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு இனிய பாடல்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. நம் இந்திய பெண்கள் இப்புஸ்தகங்களை வாசிப்பதால் பல நன்மைகள் விளையுமென்பதில் தடையில்லை. குழந்தைகளைத் தாலாட்டல், விளையாட்டுக் காட்டல், நலங்கிடும் பாடல் முதலியவை பெரிதும் அழகுடன் விளங்குகின்றன. இவ்வாறு பெண்களுக்கெனத் தனியாக முதல் முதல் வெளிவந்த புஸ்தகங்கள் இவைகளே. உபாத்திமார்கள் யாவரும் வாங்கிப்பார்த்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்துப் பயன்பெறுவார்களென நம்புகின்றோம்.

விலை—I - 2அ., II - 2 அ. 6 பை., III - 3 அ., IV - 4 அ., V - 5அ.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெருவு, சென்னை.

ஆரியமத - - - -
- - - உபாக்கியானம்

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

முதல் பாகம் விலை அணா 8 இரண்டாம் பாகம் விலை அணா 10

ஒவ்வொரு பாகமும் நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட 54 சிறந்த நீதிக்கதைகள் கொண்டது. ஒவ்வொரு கதையும் ஒரு நீதியை நன்கு போதிக்கிறது. ஒவ்வொரு பாகத்திலும் 14 அழகிய ஆப்டோன் படங்கள் அச்சிட்டு சேர்க்கப்பட் டிருக்கின்றன. வேண்டுவோர் எமது ஆபீசுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸி. [illegible]சாமி நாயுடு ஸன்ஸ்,
[illegible]35, சின்னத்தம்பி தெரு, சென்னை.